சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 9653/E/2024**

திரு.ச.ஆபேல் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், மாம்பலம் — பொது அதிகார அமைப்பு
வட்டம், சென்னை மாவட்டம் - 600 078.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.ச.ஆபேல் அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திருமதி.பா.ரஞ்சனி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மாம்பலம் வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 14.05.204 |
| **<u>கோரிய தகவல்</u>**, மிக்ஜாம் புயலால் கடுமையாக சேதமடைந்த குடிசை வீட்டினை சரிசெய்திட நிவாரணத் தொகை மற்றும் வாழ்வாதாரத்திற்கு தேவையான நிவாரண பொருட்கள் வழங்ககிடக் கோரி மனுதாரர் வட்டாட்சியர், மாம்பலம் அவர்களுக்கு 14.12.2023 அன்று மனு அளித்ததாக குறிப்பிட்டு, மேற்படி மனு மீது மேற்கொண்டுள்ள முழுமையான நடவடிக்கையின் நிலை, மேற்படி தனது கடிதம் அலுவலகப் | |

| | |
|---|---|
| பதிவேட்டில் எந்தெந்த தேதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது அதன் நகல் உள்ளிட்ட 16 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், மாம்பலம் வட்டம், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | மூ.மு.எண்.ஆ2/1349/2024, நாள் 14.06.2024<br><br>மூ.மு.எண்.ஆ2/3098/2025, நாள் 07.11.2024 |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 20.06.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 22.07.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர் இன்றைய விசாரணையின்போது, இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள 16 இனங்களுக்கான தகவல்கள் இனம் வாரியாக 07.11.2024 தேதியிட்ட தங்கள் அலுவலக கடிதம் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும், மனுதாரர் மிக்ஜாம் புயலால் சேதமடைந்த குடிசை வீட்டினை சரிசெய்வதற்கான நிவாரணத் தொகை கோரிய மனுதாரரின் 14.12.2023 தேதியிட்ட மனு மீது மாம்பலம் வட்டாட்சியரின் 21.12.2023 தேதியிட்ட கடிதத்தில், மனுதாரர் வீடானது மிக்ஜாம் புயலால் பாதிப்படைதுள்ளதை உறுதி செய்ய இயலாததால், வீடு பாதிப்படைந்ததற்கான நிவாரணத் தொகை வழங்க பரிந்துரைக்க இயலது எனவும், மேலும் மனுதாரர் மாற்றுத் திறனாளியாக இருப்பதால் இலவச வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் மனுதாரருக்கு வீடு வழங்க குடிசை மாற்று வரியத் துறையானது, மனுதாரருக்கு வீடு வழங்க பரிசீலக்கக் கோரி, நிர்வாக இயக்குநர், குடிசை மாற்று வாரியம், சென்னை அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்ட ஆட்சியர் சென்னை அவர்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.
- மனுதாரர் இன்றைய விசாரணையின் போது, தனது 14.12.2023 மனு மீது தாமதமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், தனது வீடானது மிக்ஜம் புயலால் தான் பாதிக்கப்பட்டது எனவும் எடுத்துரைக்கிறார்.

2. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் 14.05.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவில் 14.12.2023 அன்று வட்டாட்சியர், மாம்பலம் மனு அளித்ததாகவும் அதன் மீது

எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை 16 இனங்களில் வழங்கக் கோரியுள்ளார்.

b) மேற்படி மனுவிற்கு மூ.மு.எண்.ஆ2/1349/2024, நாள் 14.06.2024 மற்றும் மூ.மு.எண்.ஆ2/3098/2025, நாள் 07.11.2024 ஆகிய தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது. (மனுதாரர் இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவுடன் 14.12.2023 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவலை இணைத்து அனுப்பியுள்ளார்).

c) மேலும், *மனுதாரரின் மனு மீது, மாம்பலம் வட்டாட்சியர் 21.12.2023 தேதியிட்டு மாவட்ட ஆட்சியர், சென்னை அவர்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில், இயற்கை இடர்பாடுகள், மிக்ஜாம் புயல், சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம் கடந்த 03.12.2023 மற்றும 04.12.2023 ஆகிய நாட்களில் மிக்ஜாம் புயலின் போது கனமழையின் காரணமாக திரு.ச.ஆபேல் த/பெ.சி.சவரிமுத்து (லேட்) என்பவரின் வீடு சேதமடைந்தது நிவாரணம் கோரியதில், மனுதாரர் வீடானது மிக்ஜாம் புயலால் தான் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்ய இயலாத காரணத்தாலும், முதல் தகவலறிக்கை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்படாததாலும், மிக்ஜாம் புயலால் பாதிப்படைதுள்ளதை உறுதி செய்ய இயலாததால், வீடு பாதிப்படைந்ததற்கான நிவாரணத் தொகை வழங்க பரிந்துரைக்க இயலது எனவும், மேலும் மனுதாரர் மாற்றுத் திறனாளியாக இருப்பதால் இலவச வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் மனுதாரருக்கு வீடு வழங்க குடிசை மாற்று வரியத் துறையானது, மனுதாரருக்கு வீடு வழங்க பரிசீலக்கக் கோரி, நிர்வாக இயக்குநர், குடிசை மாற்று வாரியம், சென்னை அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதும் இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது.*

d) மேற்படி **மாம்பலம் வட்டாட்சியரால் மாவட்ட ஆட்சியர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் நகலானது, மனுதாரருக்கு இன்று பொதுத் தகவல் அலுவலரால் நேரில் சார்வு செய்யப்பட்டது**.

e) மேலும் தகவல்களை பெருத்தவரையில், மனுதாரர் கோரியுள்ள மனுதாரர் மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த 16 இனங்களுக்கான தகவல்கள் 14.06.2024 மற்றும் 07.11.2024 ஆகிய தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதங்கள் வாயிலாக வரையறுக்கப்பட்ட தினங்களுக்குள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9653/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மாம்பலம் வட்டம், சென்னை மாவட்டம் - 600 078.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.ச.ஆபேல், த/பெ.(லேட்) சி.சவரிமுத்து,
எண்.26E, டாக்டர் அம்பேத்கார் காலனி,
கே.கே.நகர், சென்னை- 600 078.

Copy to: File MP/PA-